**அறிக்கை அளிக்கக்கூடியது**

**இந்திய உச்ச நீதிமன்றம்**

**குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு**

**குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 95-96/2019**

**(சிறப்பு அனுமதி மனு (குற்ற) எண்கள் 3737-3738/2016-லிருந்து எழுகின்றன)**

**ஆன்ஸ் ராஜசேகர் .....மேல்முறையீட்டாளர்(கள்)**

**-எதிர்-**

**அகஸ்டஸ் ஜெப ஆனந்த் .....எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)**

**தீர்ப்புரை**

**மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜய ஒய். சந்திரசூட்**

அனுமதி வழங்கப்பட்டது.

மேல்முறையீட்டாளரை, மாற்றுமுறையாவணங்கள் சட்டம் ( ' சட்டம் ') 1881, பிரிவு 138-இன் கீழான குற்றத்திலிருந்து விடுவித்து, கீழமை மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நேர்மாறாக்கி, 2014-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14-ஆம் நாளிட்ட கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தனியமர் நீதியரசரின் தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இம்மேல்முறையீடுகள் எழுகின்றன.

எதிர்மேல்முறையீட்டாளர் - முறையீட்டாளரின் வழக்குயாதெனில், மேல்முறையீட்டாளர், 2004-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் வாங்கிய கடன் தொகை ரூ.15 இலட்சத்தை தீர்க்கும்பொருட்டு, 2005-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9-ஆம் நாளன்று தனக்காதரவாக ரூ.5 இலட்சத்திற்கு காசோலை வழங்கினார் என்பதாகும். முறையீட்டாளரின் கூற்றின்படி, தொகையானது ஆறு மாதங்களுக்குள்ளாக செலுத்தத்தக்கதாகும். முறையீட்டாளர், 2005-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாளன்று காசோலையை வங்கியில் அளித்தபொழுது, அது, போதிய நிதியின்மையால் வங்கியால் திருப்பப்பட்டது. முறையீட்டாளர், தொகையை வசூலிப்பதற்காக, மீண்டும் 2005-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14-ஆம் நாள் காசோலையை வங்கியில் அளித்தார், ஆனால், அது அதே காரணத்திற்காக திருப்பப் பட்டது. 2005-ஆம் ஆண்டு ஆகஸ்டு

திங்கள் 10-ஆம் நாள் முறையீட்டாளரால் கேட்பு அறிவிப்பு ஒன்று அனுப்பப்பட்டது. சட்டப்படி செலுத்தத்தக்க கடன் இருந்தது என அதற்கான பதிலில் மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர் மறுத்துரைத்தார். பதிலில், மேல்முறையீட்டாளர் இவ்வாறு கூறியுள்ளார்:

> "4. 31.01.2001 அன்று, என்னுடைய தரப்பினரும், அவரது மனைவியும் மற்றும் தங்களுடைய தரப்பினரும், அவருடைய மனைவியும், பெங்களூர், கிருஷ்ணராஜபுரம் கூப்ளி, ஹோராம்யுவகிரஉறாரா கிராம புல எண் 96/3-இல் தனித்தனியாக வீட்டு மனைகள் வாங்கினர். இம்மனைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று அடுத்தடுத்து அமைந்துள்ளன. என்னுடைய தரப்பினரின் மனைவி, தங்களுடைய தரப்பினர் சார்பாக. அதிகாரம் அளித்தால்தான், அவர், பெங்களூரிலுள்ள நிதி நிறுவனங்களிடமிருந்து வீட்டுக் கடன் பெறும் விசயத்தை மேற்கொள்ள முடியும் என தங்களுடைய தரப்பினர், என்னுடைய தரப்பினருக்கு ஆசைகாட்டினார். ஆகவே, தங்களுடைய தரப்பினர் விற்பனை கூறுகளை உள்ளடக்கிய அதிகாரப் பத்திரத்தையும் உருவாக்கினார். என்னுடைய தரப்பினர், விற்பனைக்கான கூறுகளைச் சேர்த்ததைக் குறித்து வினவியபோது, அது கவனக்குறைவாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது என்றும், அதிகாரப் பத்திரம் கடன் பெறுவதற்காகத்தான் என்றும், ஆகவே, அது பதிவுசெய்யப்பட வேண்டியதில்லை என்றும் தங்களுடைய தரப்பினர் கூறியிருந்தார்.
>
> 5. இந்த அதிகாரப் பத்திரத்தோடு, அசல் ஆவணமான ஆவண எண் 10470/2001, கணக்கு விவரப் புத்தகம், வரி இரசீதுகள், அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் தங்கள் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட காசோலை உட்பட தூத்துக்குடி, யூ.டி.ஐ. வங்கி லிமிடெட்டின் 4 வெற்றுக் காசோலைகள் மற்றும் பெங்களூர் வைசியா வங்கியின் 10 இதழ்கள் கொண்ட காசோலைப் புத்தகம் ஆகியவற்றையும் என்னுடைய

தரப்பினரிடமிருந்து தங்களுடைய தரப்பினர் பெற்றுக்கொண்டார்.

6. நிதி நிறுவனங்கள் கடனளிக்க ஒப்புதலளிக்கும்போது, கடன் தொகையை மாதந்தோறும் திருப்பிச் செலுத்துவதற்காக இக்காசோலை இதழ்களைப் பயன்படுத்திக்கொள்வர் என்பதால், காசோலைகளைக் கேட்டு வற்புறுத்துவர் எனக் கூறி, தங்களுடைய தரப்பினர் இக்காசோலைகளைப் பெற்றுக்கொண்டார். அக்காசோலைகளுள் ஒன்றை 09.03.2005 அன்று என்னுடைய தரப்பினரால் கொடுக்கப்பட்டதைப் போன்று, தங்களுடைய தரப்பினர் தற்போது தவறாகப் பயன்படுத்தியுள்ளார். அதன்பின்னர், என்னுடைய தரப்பினரும், அவருடைய மனைவியும், அதிகாரப் பத்திரத்தை இரத்து செய்துவிட்டு, காசோலை களையும், ஆவணங்களையும் திருப்பியளிக்குமாறும் தங்களுடைய தரப்பினரைக் கேட்டுக்கொண்டனர். எனினும், தங்களுடைய தரப்பினர், தனக்காகவும், தனது தந்தைக்காகவும், பாதி கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடத்துடன் உள்ள வீட்டுமனைகளை அபகரிப்பதிலேயே குறியாக உள்ளார்.இது தொடர்பாக, ஏற்கெனவே ஒரு முயற்சி மேற்கொள்ளப் பட்டது.தங்களுடைய தரப்பினரின் தந்தையார், தங்களுடைய தரப்பினருடன் வஞ்சகத் திட்டமிட்டு, மேற்குறிப்பிடப்பட்ட புல எண்ணில் அமைந்துள்ள மேற்படி வீட்டு மனையின் கிரைய ஆவணத்தை தனக்காதரவாக நிறைவேற்றக்கோரி, என்னுடைய தரப்பினருக்கு பொய்யான குற்றச்சாட்டுகள் அடங்கிய 09.05.2005-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பு ஒன்றை அனுப்பினார்.அந்த முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து, தற்போது அவருடைய மகனான தங்களுடைய தரப்பினர், சட்டத்திற்குப் புறம்பான வேறொரு வழியில், மேற்குறிப்பிடப்பட்ட காசோலையைப் பயன்படுத்தி, என்னுடைய தரப்பினரைத் துன்புறுத்தி, மேற்படி வீட்டு மனையை எடுத்துக்கொள்ள முயன்று வருகிறார். "

மேற்படி பதிலானது தெரிவிப்பதைப்போன்று, மேல்முறையீட்டாளரின் மறுப்புவாதம்யாதெனில், மேல்முறையீட்டாளரும், அவருடைய மனைவியும் மற்றும் முறையீட்டாளரும், அவருடைய மனைவியும் அடுத்தடுத்துள்ள வீட்டு மனைகளை வாங்கியிருந்தனர். பெங்களூரிலுள்ள நிதி நிறுவனங்களில் வீட்டுக் கடன் பெறுவதற்காக, தனக்கு ஆதரவாக அதிகாரப் பத்திரத்தை நிறைவேற்றுமாறு, முறையீட்டாளர், மேல்முறையீட்டாளரை வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, அதிகபட்சமாக யூ.டி.ஐ. வங்கி லிமிடெட்டின் நான்கு வெற்றுக் காசோலைகளும், பத்து இதழ்களைக் கொண்ட வைசியா வங்கியின் காசோலைப் புத்தகமும் மேல்முறையீட்டாளரிடம் இருந்து முறையீட்டாளரால் பெறப்பட்டன. எதிர்மேல் முறையீட்டாளர்-முறையீட்டாளரிடம், மேல்முறையீட்டாளரால் ஒப்படைக்கப்பட்ட காசோலைகளுள் ஒன்று தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முறையீட்டாளர், 2005-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9-ஆம் நாளன்று சட்டத்தின் பிரிவு 138-இன் கீழ் ஆ.ப.வ. எண் 26999/2006-ஆன ஒரு முறையீட்டை, பெங்களூரிலுள்ள கூடுதல் முதன்மை பெருநகர நீதித்துறை நடுவர் முன்பாக தாக்கல் செய்தார்.

விசாரணை நீதிமன்றமானது, 2009-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ஆம் நாளிட்ட தீர்ப்புரை மூலம் மேல்முறையீட்டாளரை விடுவித்தது. முறையீட்டாளர் எதிர்மேல்முறையீட்டாளர் உயர் நீதிமன்றத்தின் முன்பாக குற்றவியல் மேல்முறையீடு எண் 285/2009- ஐ தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றம், 2010-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29-ஆம் நாளிட்ட அதனுடைய தீர்ப்புரை மூலம் மேல்முறையீட்டை அனுமதித்து, " ரங்கப்பா - எதிர்-ஸ்ரீ மோகன் [1], (2010) 11 எஸ்.சி.சி. 441:(ஏ.ஐ.ஆர்.2010 எஸ்.சி. 1898)-இல் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையைக் கருத்திற்கொண்டு, விசாரணை நீதிமன்றத்திற்கு வழக்கைத் திருப்பியது. திருப்பியதையடுத்து, விசாரணை நீதிமன்றம், 2011-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5-ஆம் நாளிட்ட தீர்ப்புரை மூலம் மேல்முறையீட்டாளருக்கு தண்டனைத் தீர்ப்பளித்து, ஓராண்டு காலம் சிறைத்தண்டனை அனுபவிக்கவும், ரூ .7 இலட்சம் தண்டம் செலுத்தவும் தண்டித்து, அதிலிருந்து ரூ.6.75 இலட்சத்தை நட்டயீடாக எதிர்மேல்முறையீட்டாளருக்கு செலுத்தவும் பணித்தது.

மேல்முறையீட்டாளர், பெங்களூர், கூடுதல் அமர்வு நீதிபதி முன்பாக குற்றவியல் மேல்முறையீடு எண் 245/2011- ஐ தாக்கல் செய்தார். முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம், 2012-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5-ஆம் நாளிட்ட தீர்ப்புரை மூலம், விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட குற்ற மற்றும் தண்டனைத் தீர்ப்பை எதிர்மறையாக்கியது. அதன்பேரில் எதிர்மேல்முறையீட்டாளர், குற்றவியல் மேல்முறையீடு எண் 861/2012 என்ற குற்றவியல் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தும், அவர் வரவில்லை என்று உயர் நீதிமன்றம் பதிவு செய்து, விடுதலை தீர்ப்புரையை எதிர்மறையாக்கியது. சட்டத்தின் பிரிவு 138-இன் கீழ் உயர் நீதிமன்றம், தண்டனைத் தீர்ப்பைப் பதிவு செய்கையில், எதிர்மேல்முறையீட்டாளருக்கு நட்டயீடாகச் செலுத்தவேண்டிய ரூ.5 இலட்சத்தை அபராதமாக மேல்முறை யீட்டாளர் செலுத்தவேண்டும், தவறினால், அவர் மூன்று மாத காலம் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்பதாக தண்டனையை மாற்றியமைத்தது.

---

1 (2010) 11 எஸ்.சி.சி. 4415

விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட தண்டனைத் தீர்ப்பு நிலைநிறுத்தப்பட்டது, ஆனால், அபராதத் தொகையானது மேற்குறிப்பிடப்பட்டவாறாக குறைக்கப்பட்டது.

2016-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ஆம் நாளன்று, மனுவின் மீதும், சிறப்பு அனுமதி மனுவைத் தாக்கல் செய்ததிலும் 410 நாட்கள் தாமதம் இருந்ததால், காலவரையறை என்ற பிரச்சினையின்பேரில் அறிவிப்பு அனுப்பப்பட்டது. காலதாமதத்தை மன்னிப்பதற்காக மேல்முறையீட்டாளரால் தெரிவிக்கப்பட்ட காரணத்தைப் பரிசீலித்து, காலதாமதத்தை மன்னிப்பது பொருத்தமானதென நாங்கள் கருதுகிறோம். மேல்முறையீட்டாளர், தனது பரிகாரங்களைத் தேடுவதில், அவர் தரப்பில் வேண்டுமென்றே கவனக்குறைவாக இருந்ததான செயல்பாடு ஏதுமிருந்ததாக இவ்வழக்கின் பதிவாவணத்திலிருந்து நாங்கள் ஏதும் காணவில்லை.

மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை எதிர்த்து, இரு அம்சங்களின்பேரிலான பணிந்துரைகளை முன்வைத்துள்ளார். முதலாவதாக, சட்டப்படியாக

செலுத்தத்தக்க கடனேதுமில்லை என பணிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, உயர் நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டுள்ள தண்டனைத் தீர்ப்பு நிலைநிறுத்தத்தகாதது என உறுதிபடக் கூறியுள்ளார். இரண்டாவதாக, பிரிவு 139-இன் வகையங்களில் குறிப்பிடப்பட்ட பொறுப்பை மேல்முறையீட்டாளர் நிறைவேற்றி, (மேற்படி) ரங்கப்பா (ஏ.ஐ.ஆர்.2010 எஸ்.சி. 1898) -இல் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மூலம் பணிக்கப்பட்டவாறு, சாத்தியக்கூறுகள் பெரிதும் மிகுந்திருப்பதன் பேரில் மறுப்பு வாதத்தை நிலைநிறுத்தியுள்ளார் என வாதிடப்பட்டுள்ளது. தற்பொழுதைய மேல்முறையீட்டிற்கு ஆதரவாக மேல்முறையீட்டாளரின் பணிந்துரைகள் உள்ளதால், அத்தீர்ப்புரையின் சாட்சிய மதிப்பீட்டைப் பின்பற்றி, 2012-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5-ஆம் தேதியிடப்பட்ட கூடுதல் அமர்வு நீதிபதியால் வழங்கப்பட்ட விடுதலைத் தீர்ப்பை, கற்றறிந்த வழக்குரைஞர் பெரிதும் சார்ந்து நின்றுள்ளார். உயர் நீதிமன்றமானது, விடுதலைத் தீர்ப்பை எதிர்மறையாக்குகையில் எச்சரிக்கையாக இருந்திருக்கவேண்டும், சான்றினை மதிப்பிட்டதன்பேரில், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட விடுதலைத் தீர்ப்பானது நெறிபிறழ்ந்ததென்றோ அல்லது நீதி வழுவலுக்கு வழிகோலும் என்றோ முடிவிற்கு வருவதற்கு குறைந்தபட்ச காரணங்கள் எதையும் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பில் கூறப்படவில்லை என கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார்.

மறுபுறத்தில், முறையீட்டாளர்-எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், (மேற்படி) ரங்கப்பா என்னும் தீர்ப்பை சார்ந்து, மேல்முறை-யீட்டாளர் தன்மீது சுமத்தப்பட்ட பொறுப்பை நிறைவேற்றவில்லை என்றும், சட்டத்தின் பிரிவு 139-இன் கீழான அனுமானமானது, தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்து கிறதென்றும் பணிந்துரைத்துள்ளார். சான்றாவணத்திற்கு கவனத்தை ஈர்த்து, குற்றஞ்சாட்டப்பட்டவரால் காசோலையில் கையொப்பமிடப்பட்டு, அவர் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் அது எழுதிக் கொடுக்கப்பட்டதென்பதில் தகராறு ஏதுமில்லை என்னும் பொருண்மை வாதிடப்பட்டுள்ளது. பிரிவு 138-இன் கீழான தண்டனைத் தீர்ப்பைப் பதிவுசெய்கையில், மறுப்பு வாதமானது விசாரணை நீதிமன்றத்தால் சரியாகவே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் உயர் நீதிமன்றமும் தண்டனைத் தீர்ப்பை மீட்டளிக்கையில் தவறிழைக்க வில்லை என வாதிடப்பட்டுள்ளது. மாறானது நிரூபிக்கப்பட்டிருந்தாலன்றி,

காசோலையைக் கொண்டிருப்பவர் அதனை கடன் அல்லது பொறுப்பை முழுமையாக அல்லது பகுதியாக தீர்ப்பதற்காக அதனைப் பெற்றுள்ளதாக அனுமானிக்கப்படவேண்டும் என பிரிவு 139 கட்டளையிடுகிறது. பிரிவு 139-இன் கீழான அனுமானமானது, எதிர்த்துரைக்கத்தக்கது என்பதை " மாறானது நிரூபிக்கப்பட்டாலன்றி " என்ற சொல்லமைப்பானது சுட்டிக்காட்டுகிறது. இதனை " எதிர்மறை பொறுப்பு விதி கூறு " -இன் எடுத்துக்காட்டு எனக்கூறி, இந்நீதிமன்றத்தின் மூவரமர் நீதியராயமானது (மேற்படி) ரங்கப்பா என்னும் வழக்கில் ' அனுமானமானது எதிர்த்துரைக்கப்பட்டுள்ளதா? என்பதை தீர்மானிப்பதில், விகிதாச்சார ஆய்வானது தீர்மானத்தை வழிநடத்தவேண்டும் " என தீர்ப்பளித்துள்ளது. சட்டப்பிரிவு 139-இன் கீழான அனுமானத்தை எதிர்த்துரைப்பதற்கான சான்றின் தரமானது, பெரிதும் மிகுந்திருக்கும் சாத்தியங்களால் வழிநடத்தப்படுகிறது.இந்நீதிமன்றம் இவ்வாறாக தீர்ப்பளித்தது:

> "28 நியாயமான நிர்ப்பந்தம் இல்லாத நிலையில், எதிர்மறைப் பொறுப்பு விதி, வழக்கமான சான்றுப் பூர்வமான பொறுப்பை விதிக்கிறதேயன்றி, செயல் நோக்கமுடைய பொறுப்பையல்ல.இதனைக் கருத்திற்கொண்டு, பிரிவு 139-இன் கீழான அனுமானத்தை, குற்றஞ்சாட்டப்பட்டவர் எதிர்த்துரைக்கவேண்டியுள்ள பொழுது, அவ்வாறு செய்வதற்கு பெரிதும் மிகுந்திருக்கும் சாத்தியங்களே சான்றின் தரமாகும் என்பது அறுதியிடப்பட்ட நிலைப்பாடாகும்.எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டப்படி தீர்க்கப்படவேண்டிய கடனிருப்பதை அல்லது பொறுப்பிருப்பதைக் குறித்த ஐயப்பாட்டை உருவாக்கக் கூடிய மறுப்புவாதத்தை எழுப்ப முடியுமானால், வழக்குத் தொடுத்தவர் தோல்வி அடையலாம். மேற்கோள்களில் தெளிவுபடுத்தப்பட்டது போன்று, குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தகைய தற்காப்பு வாதத்தை வைக்கும்பொருட்டு, முறையீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைச் சார்ந்து நிற்கமுடியும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் சில வழக்குகளில் தன்னுடைய சொந்த

சாட்சியத்தை கூறத் தேவையில்லை என்பது எண்ணிப்பார்க்க வேண்டியதாகும். "(வலியுறுத்தப்பட்டுள்ளது)

தற்பொழுதைய வழக்கில், சட்டப்பிரிவு 139-இன் கீழான அனுமானமானது, குற்றஞ்சாட்டப்பட்டவர்-மேல்முறையீட்டாளரால் பொய்ப்பிக்கப்பட்டுவிட்டதா? என்பதை பரிசீலிப்பது தற்போது அவசியமாகிறது. மேல்முறையீட்டாளரின் மறுப்பு வாதம்யாதெனில், சாட்டுரைக்கப்பட்டவாறு, அவர் முறையீட்டாளரிடமிருந்து தொகை ரூ.15 இலட்சத்தை கடன் வாங்கவுமில்லை, சட்டப்படி செலுத்தத்தக்க கடனைத் தீர்க்கும்வகையில் காசோலையை (ம.சா.ஆ.1) அவர் வழங்கவுமில்லை என்பதாகும்.குறிப்பாக, குற்றஞ்சாட்டப்பட்டவரின் மறுப்பு வாதம் யாதெனில், எக்கடனை தீர்ப்பதற்காக காசோலைகள் வழங்கப்பட்டனவோ, அத்தொகையானது முறையீட்டாளரால் தனக்கு கொடுக்கப்படவில்லை என்பதாகும்.காசோலையானது, நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெறுவதற்குதான் என உறுதியளித்ததன்பேரில் அது, முறையீட்டாளரிடம் வழங்கப்பட்டது என்பது அவருடைய மறுப்பு வாதமாகும். நாங்கள் குறிப்பிட்டிருப்பதுபோன்று, இதுவுங்கூட முறையீட்டாளரால் அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்புக்கான மறுப்புரையாகும்.

இப்பின்னணியில், குற்றஞ்சாட்டப்பட்டவர் மேல்முறையீட்டாளரை விடுவிக்க, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் சார்வுறப்பட்ட சான்றாதாரத்திற்கு கவனந்திருப்பவேண்டியதாகிறது. அவரது குறுக்கு விசாரணையின்பொழுது, மேல்முறையீட்டாளரால் தனக்கு ஆதரவாக பொது அதிகாரப் பத்திரம் நிறைவேற்றப்பட்டதை அ.சா .1 ஒப்புக்கொண்டார்.ஒப்புக்கொண்டவாறு, மேல்முறையீட்டாளரும், எதிர்மேல்முறையீட்டாளரும் உறவினர்கள்; முறையீட்டாளரின் தந்தையாருக்கும், மேல்முறையீட்டாளருக்கும் இடையில் ஏதோவொரு உரிமையியல் தகராறு இருந்துவந்தது. உண்மையில் முறையீட்டாளர், தான், மேல்முறையீட்டாளரிடம் ரூ.10 இலட்சம் கடனாக பெற்றதை ஒப்புக்கொண்டார்; ஆனால், அவர் அத்தொகையை மேல்முறையீட்டாளருக்கு திருப்பிக்கொடுத்துவிட்டதாகக் கூறியுள்ளார். 2004-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மேல்முறையீட்டாளர் தன்னிடம் ரூ .15 இலட்சம் கடன் கேட்டதாக அ.சா.1 தெரிவித்தார். முறையீட்டாளரால் உண்மையில் தனக்கு எந்த தொகையும் தரப்படவில்லை என்பது

மேல்முறையீட்டாளரின் தற்காப்பு வாதமாயிருப்பதால், கடனைத் திருப்பிக்கொடுத்தல் தொடர்பான அ.சா.1-இன் சாட்சியமானது முக்கியத்துவம் பெறுகிறது.

அ.சா.1-இன் கூற்றின்படி, கடன் தொகை ரூ.15 இலட்சமானது மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளுக்கு இணங்க அவருடைய பிரதிநிதியிடம் அளிக்கப்பட்டது என்பதாகும். ரூ.15 இலட்சமானது எந்த பிரதிநிதியிடம் பணமாக தரப்பட்டதாகக் கூறப்படுகிறதோ, அப்பிரதிநிதியின் பெயரைக்கூட மேல்முறையீட்டாளர் தெரிவிக்கவில்லை. குறிப்பிடத்தக்க மொத்தத் தொகையும் இரசீது இல்லாமலும் அல்லது தொகையானது செலுத்தப்பட்டதற்கு சான்றளிக்கும் ஆவணமேதுமின்றியும் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. போதிய நிதியின்மையால் காசோலையானது திருப்பப்பட்ட பின்னர், மேல்முறையீட்டாளருக்கு, முறையீட்டாளரால் அனுப்பப்பட்ட கேட்பறிவிப்பில், மேல்முறையீட்டாளர் ரூ.15 இலட்சம் ' நிதி வகையிலான கடன் ' உதவி கேட்டு, தொகை ரூ .20,000/- ஐ கொடுத்தார் (அதன்பின்னர் திருத்தப்படவேண்டிய அச்சுப்பிழையை சரிசெய்தார்) என முறையீட்டாளர் கூறினார்.

முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமானது தன்னுடைய தீர்ப்பை வழங்குகையில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குறுக்கு விசாரணையை நடத்தும்பொழுது, குற்றஞ்சாட்டப்பட்டவர், ரூ.15 இலட்சம் கடன் கேட்டார் என்றும், ஆனால், அச்சமயத்தில் முறையீட்டாளர், தொகை ரூ.5 இலட்சம் மட்டுமே கடன் கொடுத்ததாகவும், அதற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர் ம.சா.1-ஐ வழங்கியதாக முறையீட்டாளர் கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கருத்தானது குற்றஞ்சாட்டப்பட்டவரால் திட்டவட்டமாக மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, முறையீட்டில் கூறப்பட்டவாறு, முறையீட்டாளர், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ரூ.15 இலட்சம் நிதி கடன் உதவியளித்தாரா? அல்லது 2004-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10-ஆம் தேதியிடப்பட்ட சட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டவாறு, முறையீட்டாளர் ரூ.20 இலட்சம் கொடுத்தாரா? அல்லது குறுக்கு விசாரணையின்பொழுது, அவர் கருத்துரைத்தது போன்று ரூ.5 இலட்சம் கொடுத்தாரா? என்பது கடும் ஐயப்பாட்டுக்குரிய விடயமாக உள்ளது என முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. முறையீட்டாளர்,

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ரூ.15 இலட்சம் கொடுத்திருந்தாரென்றால், குறுக்கு விசாரணையின்பொழுது, தொகை ரூ.5 இலட்சம் கொடுத்துள்ளதாக தெரிவித்திருப்பது கடன் உள்ளது என்பதன்பேரிலேயே கடும் ஐயத்தை தோற்றுவிப்பதில் முதல் இடத்தை வகிக்கிறது.

மேலே விவரிக்கப்பட்டுள்ளதைத் தவிர, வழக்கின் முக்கியமான பகுதியாதெனில், மேல்முறையீட்டாளருக்கு ரூ.15 இலட்சம் கடன் கொடுத்ததற்கு பயன்படுத்தியதாகச் சொல்லப்படும் நிதி ஆதாரத்தை நிறுவ, முறையீட்டாளர் தவறிவிட்டார் என்பதாகும். முறையீட்டாளர், தனது குறுக்கு விசாரணையின்பொழுது, முன்னதாக, மேல்முறையீட்டாளர் இரண்டு காசோலைகளைக் கொடுத்ததாகவும், அதில் ஒன்று தான் ரூ.5 இலட்சத்திற்கான ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியினுடையது, மற்றொன்று ரூ.10 இலட்சத்திற்கான கனரா வங்கியினுடையது என்றும், அவற்றை தான் சமர்ப்பித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். முறையீட்டாளர், தன்னுடைய முறையீட்டில், குற்றஞ்சாட்டப்பட்டவர் இவ்விரு காசோலைகளை வழங்கியதைக் குறித்து தான் ஏதும் குறிப்பிடவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். மேல்முறையீட்டாளரால் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் முந்தைய இரு காசோலைகளின் நிலை குறித்து முறையீட்டாளரால் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. முந்தைய இரு காசோலைகளைக் குறித்தும், அவற்றை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டுள்ளதைக் குறித்தும் எந்தப் பொருண்மைகளையும் தெரிவிக்காமலிருந்தது அங்கு பரிவர்த்தனை தொடர்பாக ஐயம் இருந்தது என்பதை மீண்டும் சுட்டிக்காட்டும் ஒரு முக்கியமான பரிசீலனையாகும்.

பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் மொத்தமாக எடுத்துக்கொண்டும் மற்றும் ஆவணச் சான்றுகளின் அடிப்படையிலும், சட்டப்பிரிவு 139-இன் கீழான அனுமானமானது பொய்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் மறுப்பு வாதமானது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவுசெய்துள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிலிருந்து தெரியவரும் இவ்வழக்கின் முக்கியமான அம்சம்யாதெனில், சான்றின் மதிப்பீடோ அல்லது முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட காரணங்களைக் குறித்த குறிப்பீடோ அதில் இல்லை என்பதாகும். உயர் நீதிமன்றமானது, இந்நீதிமன்றத்தின் (மேற்படி) ரங்கப்பா, (ஏ.ஐ.ஆர் .2010 எஸ்.சி. 1898)

என்னும் வழக்கின் தீர்ப்பைக் குறிப்பிட்டுள்ளது. பரிவர்த்தனையை மறுத்தலையோ அல்லது ஒட்டுமொத்த பரிவர்த்தனையையும் முற்றிலும் மறுத்தலையோ நிலைக்கத்தக்க மறுப்பு வாதமாகக் கருதக்கூடாது எனத் தீர்மானித்த உயர் நீதிமன்றம், விடுதலைத் தீர்ப்பை எதிர்மறையாக்கியது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பானது திருப்தியளிப்பதாக இல்லை மற்றும் எவ்விதமான சான்றுகுறித்தும் குறிப்பேதுமில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்கையில், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட பொருண்மை காண்முடிவுகளை நீக்க முற்றிலும் தகுந்ததொரு அடிப்படை ஏதுமில்லை.

மேலே தெரிவிக்கப்பட்ட காரணங்களுக்காக, இந்நீதிமன்றத்தின் மூவரமர் நீதியராயத்தால் (மேற்படி) ரங்கப்பா, (ஏ.ஐ.ஆர்.2010 எஸ்.சி. 1898) என்ற வழக்கின் தீர்ப்பில் வகுக்கப்பட்ட சட்டத்தினைக் கருத்திற்கொண்டு, சட்டப்பிரிவு 139-இன் கீழான அனுமானத்தை உரியமுறையில் மேல்முறையீட்டாளர் பொய்ப்பித்துவிட்டார். சட்டப்படி செலுத்தத்தக்க கடனேதுமில்லை என்ற அவருடைய மறுப்பு வாதமானது சான்றாவணங்களின்படி மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என நாங்கள் கருதுகின்றோம். அதன்விளைவாக, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட விடுதலை உத்தரவானது நியாயப்படுத்தப்படுகிறது.

இச்சூழ்நிலைகளில், நாங்கள் இம்மேல்முறையீடுகளை அனுமதித்து, மேல்முறையீட்டாளருக்கெதிராக சட்டப்பிரிவு 138-இன் கீழ் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தண்டனைத் தீர்ப்புரையை நீக்கறவு செய்கின்றோம்.

நாங்கள், அதற்கிணங்க, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட விடுதலை உத்தரவை மீட்டளிக்கின்றோம்.

**[மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்ஜய ஒய் சந்திரசூட்]**

**[மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர். ஷா]**

**புதுதில்லி;**

18.01.2019

---

**<u>உரிமைத்துறப்பு</u>**

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."